**செய்தி வெளியீடு எண்: 446** **நாள்: 11.07.2018**

**செய்தி வெளியீடு**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தொழில் ஆர்வத்தைத் துலங்கச் செய்வதற்கும், தொழில் முனையும் ஆர்வம் உள்ளவர்களுக்கு வழிகாட்டுவதற்கும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கல்லூரி மாணவர்களிடம் புத்தாக்க சிந்தனைகளை உருவாக்கும் பொருட்டு கருத்து பொறிப்பகங்களை உருவாக்கி புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்து வருகிறது.

அரசு கலைக் கல்லூரிகள், அரசு தொழில் நுட்ப கல்லூரிகள் ஆகியவற்றில் படிக்கும் மாணவர்கள் வேலைவாய்ப்பை மட்டுமே எதிர்பார்த்திருக்காமல் சொந்தமாகத் தொழில் தொடங்கி நடத்தினால் அவர்களுடைய பொருளாதாரம் மேம்படுவதோடு எண்ணற்ற சிறு, குறு தொழில்கள் பெருகி சமூக சமத்துவம் நிகழ்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இதை மனத்தில் கொண்டு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள 88 அரசுக் கல்லூரிகளில் சுமார் 45 லட்சம் ரூபாய் செலவில் ஒரு நாள் விழிப்புணர்வு முகாம் நடத்த திட்டமிட்டுள்ளது. இதற்கான ஆணையை அரசு ஜூன் மாத இறுதியில் பிறப்பித்தது.

இந்த பயிற்சி முகாம்களை ஓர் ஆண்டிற்குள் தமிழகமெங்கும் நடத்த அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான தொடக்க நிகழ்ச்சி நந்தனத்தில் உள்ள அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் 11.07.2018 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தொழில்முனையும் ஆர்வமுள்ள 100 மாணவர்கள் பங்கேற்றார்கள். தொடக்க விழாவில் கல்லூரியின் முதல்வர் முனைவர் பிரபாகரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். முகாமின் நோக்கங்களையும், அதைத் தொடர்ந்து மாணவர்கள் எவ்வாறு

தொழில்முனைவது குறித்து கூடுதல் விவரங்களைப் பெறலாம் என்பது பற்றியும் எடுத்துச் சொன்னார்.

கூடுதல் இயக்குநர் திருமதி ஷஜீவனா அவர்கள் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்துடைய நோக்கங்களையும், செயல்பாட்டையும் மாணவர்களுக்கு விளக்கினார். இந்த ஒரு நாள் முகாமில் எப்படிப்பட்ட அனுபவங்களைப் பெறலாம் என்பதையும், அவர்கள் எந்த வியாழக்கிழமையிலும் மாலை நேரத்தில் அலுவலகத்திற்கு வந்து அவர்கள் தொடங்கப்போகிற தொழில் குறித்து ஆலோசனைகளைப் பெறலாம் என்றும் நம்பிக்கையூட்டினார். பின்னர் வணிகத் திட்டம் தயாரிப்பது, மெருகேற்றுபவரை நியமிப்பது போன்ற பல நடவடிக்கைகளில் எவ்வாறு நிறுவனம் அவர்களைக் கைப்பிடித்து வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்பதையும் தெளிவுபடுத்தினார். அவர் உரை மாணவர்களுக்கு தொழில்முனைவோர் ஆக வேண்டும் என்கிற உற்சாகப் பொறியை உள்ளத்தில் ஏற்படுத்தியது.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் செயலாளர் திரு தர்மேந்திர பிரதாப் இ.ஆ.ப. அவர்கள் மாணவர்கள் தொழில்முனைவோராக கூட்டு முயற்சியில் ஆக முடியும் என்று தெரிவித்தார். மேலும் ஆர்வமுள்ள துறையில் ஈடுபட்டால் அவர்கள் வெற்றிபெற முடியும் என்றும் குறிப்பிட்டார். அவர்கள் இந்த முகாமில் வளர்த்துக்கொள்ளும் திறன்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தன்னம்பிக்கையோடு செயல்பட உதவும் என்றும் விளக்கினார். அத்துடன் அரசுக் கல்லூரி மாணவர்கள் வாழ்வின் சவால்களை சந்திப்பதால் மிகுந்த பொறுப்புணர்வோடு வாழ்க்கையை எதிர்கொள்ளும் திறமையை வளர்த்துக்கொள்பவர்கள், எனவே அவர்களால் நல்ல தொழில்முனைவோராக முடியும் எனவும் குறிப்பிட்டார். சமூகரீதியாகவும் தொழில்முனைவோராவது அவசியம் என்ற அவர், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், தொழில்முனைவோர்

ஆகியோருடைய ஒருங்கிணைப்பு சிறந்த சுற்றுச்சூழலை உருவாக்க முக்கியம் என்று கூறி முத்தாய்ப்பாய் துன் உரையை முடித்தார்.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் இறையன்பு அவர்கள் பயிற்சியின் நோக்கத்தைப்பற்றி குறிப்பிட்டார். மாறிவரும் சூழலுக்கேற்ப எல்லா உயிரினங்களும் தங்களை தயார்செய்துகொள்கின்றன என்பதை அந்துப்பூச்சிகளின் மூலம் உதாரணம் காட்டிப் பேசிய அவர், சரித்திரத்திலேயே ஆபத்தோடு வாழ்ந்தவர்கள்தாம் அதிகம் சாதித்தனர் என்று எடுத்துக்காட்டுகளை முன்வைத்தார். இதுவரை 1,90,000 இளைஞர்களுக்கு இந்நிறுவனம் பயிற்சி அளித்திருப்பதாகக் குறிப்பிட்டார். மாணவர்கள் வளாக நேர்காணல் மட்டுமே வாழ்வின் ஒரே கலங்கரைவிளக்கம் என்று கருதாமல் எண்ணற்ற வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ள முடியும். முகாமில் கலந்துகொள்கிற அனைவரும் உடனடியாக தொழில்முனைவோராக ஆக வேண்டும் என்கிற கட்டாயமில்லை. ஆனால், தொழில்முனைவோராக முடியும் என்கிற நம்பிக்கையை இதயத்தில் விதைத்தால் போதும். அவர்கள் தங்கள் நோக்கத்தை வைத்து அதற்கேற்றவாறு ஒரு பணியைத் தேடிக்கொள்ளலாம் அல்லது கூட்டாக ஈடுபடலாம். பின்னர் தங்கள் அனுபவங்களின் அடிப்படையில் முயற்சியை மெருகேற்றி சொந்தத் தொழில் தொடங்கலாம் என்று குறிப்பிட்ட அவர், பல முன்னணி உணவுவிடுதிகளை நடத்துபவர்கள் தொடக்கத்தில் பரிமாறுபவர்களாகப் பரிமளித்தவர்களே என்றும் தெரிவித்தார். இந்த முகாம் தொடக்கமே தவிர முடிவல்ல என்று குறிப்பிட்ட அவர், எந்த ஆலோசனை வேண்டுமென்றாலும் நிறுவனத்தை அணுகலாம் என்று குறிப்பிட்டார். வந்திருக்கும் நூறு மாணவர்களில் பத்து பேர் தொழில்முனைவோராக

மாறினால்கூட அவர்கள் நூறு பேருக்கு வேலை கொடுக்கலாம் என்று உற்சாகம் ஊட்டினார்.

தொடக்க விழாவைத் தொடர்ந்து திருமதி வசந்தகுமாரி அவர்கள் தொழில்முனைவோர் யார் என்று அறிமுகை உரை நிகழ்த்தினார். அதற்குப் பிறகு திரு ஷியாம் சேகர் அவர்கள் புதுக் கருத்தை எப்படி உருவாக்குவது என்பதையும், எவ்வாறு தொழில்திட்டத்தை வடிவமைப்பது என்பதையும், தொழிலைத் தொடங்க படிக்கட்டுகள் எவை என்பதையும் விளக்கிக் கூறினார். அடுத்ததாக தொழில்வாய்ப்புகள் குறித்து திருமதி காதம்பரி சதீஷ் அவர்கள் பல்வேறு உதாரணங்களோடு விளக்க உரை ஆற்றினார். பின்னர் தமிழ்நாடு தொழிற்கொள்கைகள் குறித்து திரு ஜகதீசன் அவர்கள் உரையாற்றினார். வங்கித் திட்டங்கள் பற்றி திரு மதியழகன் அவர்களும், தன்னுடை வெற்றிக்கதை பற்றி திருமதி பாக்கியலட்சுமி அவர்களும் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**